**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**C.C. 199/2025**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சக்திவேல்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. பழனிச்சாமி** | **Calling** | : | **விவசாயம்** |
| **Village** | : | **ஒட்டன்சத்திரம்** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **54** |
| | | | **Dated** | : | **19.11.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜர்.**

அ.சா. 1 (பட்டியல் சாட்சி 1), **திரு. சக்திவேல்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். என்னுடைய மகன் மதன்பாலாஜி 16.12.2021ம் தேதி வசூலுக்காக மாலை 06.00 மணிக்கு திண்டுக்கலுக்கு வந்தார். அவருடன் தியாகு என்ற டிரைவர் போனார். அவர் காய் வாங்கி கடைகளுக்கு போடும் வியாபாரம் செய்து வந்தார். எனக்கு மாலை 07.30 மணியளவில் மேற்படி டிரைவர் போன் செய்து விபத்து ஏற்பட்டுவிட்டது என்றும், 407 வண்டி ஒன்று எங்களுக்கு சொந்தமான TN 38 AB 4757 என்ற கார்மீது மோதி விபத்து

ஏற்பட்டுவிட்டது என்றும் சொன்னார். உடனே நாங்கள் சம்பவ இடத்திற்கு போனபோது, ஆம்புலன்ஸில் என் மகனை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக சொன்னார்கள். அங்கு சென்று பார்த்தபோது ஆம்புலன்ஸில் இருந்து என் மகனை இறக்கிகொண்டு இருந்தார்கள். அவருக்கு தலையிலும், நெஞ்சிலும் அடிபட்டு இருந்தது. அவர் இறந்துவிட்டதாக மருத்துவமனையில் சொன்னார்கள். மேற்கொண்டு விசாரித்தபோது, அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் எதிரே வந்த 407 வண்டி எங்கள் காரின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்று சொன்னார்கள். நான் அன்று இரவு தாடிக்கொம்பு காவல் நிலையத்தில் இந்த சம்பவம் தொடர்பாக புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் சங்கதிகள் அனைத்தும் தெரிந்து தான் கையொப்பம் செய்தேன். அதை அசோக்குமார் எழுதினார். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எதிரியை 5 நாட்கள் கழித்து காவல் நிலையத்தில் அவர்தான் விபத்தை ஏற்படுத்தியவர் என்று சொன்னார்கள். அதன்பிறகு அவரை இன்று தான் பார்க்கிறேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

எதிரி தான் வண்டியை ஓட்டினார் என்று போலீசார் சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். நான் நேரடியாக இந்த வழக்கு சம்பவத்தை என்றால் சரிதான். இந்த விபத்தானது எனது மகன் பயணம் செய்த காரின் ஓட்டுநருடைய கவனக்குறைவினால்தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக இழப்பீடுகோரி நான் மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன்.

**<u>மறு விசாரணை :–</u>** இல்லை.

Taken down by me/before me in open court on 19.11.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2025.11.19 18:38:20 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**C.C. 199/2025**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ராம் தியாகு** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. வீராச்சாமி** | **Calling** | : | **டிரைவர்** |
| **Village** | : | **பாச்சலூர், ஒட்டன்சத்திரம்** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **30** |
| | | | **Dated** | : | **19.11.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**எதிரி ஆஜர்.**

அ.சா. 2 (பட்டியல் சாட்சி 2), **திரு. ராம் தியாகு** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :-**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். 16.12.2021ம் தேதி நானும், மதன் பாலாஜியும் ஒட்டன்சத்திலிருந்து திண்டுக்கல் வந்து கொண்டு இருந்தோம். அப்பொழுது மணி சுமார் 07.30 இருக்கும். எங்களுக்கு எதிரே வந்த 407 வேன் பின்னால் பெயர் விசாரித்து தெரிந்து கொண்ட சந்தியா சுவாகின் என்பவர் அதிவேகமாக ஓட்டி வந்து எங்கள் வண்டிமீது மோதினார். அவர் மோதிய வேகத்தில் பக்கத்தில் இருந்த மதன் பாலாஜி முன்பக்க கண்ணாடி உடைந்து வெளியே தூக்கி எறியப்பட்டார். அவருக்கு தலையில் சரியான அடிபட்டு, நிறைய இரத்த சேதம் ஏற்பட்டது. அங்கிருந்தவர்கள் ஆம்புலன்ஸிக்கு போன் செய்து, மதன் பாலாஜியை

முதலில் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். என் பக்க கதவு திறக்கமுடியாமல் சிக்கிக் கொண்டதால், கதவை உடைத்து அங்கிருந்தவர்கள் என்னை வெளியே எடுத்தார்கள். ஆஜர் எதிரி தான் மேற்படி 407 வேனை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்தவர். எனக்கு நெஞ்சிலும், வலது பக்க தோள்பட்டையிலும் அடிபட்டு இருந்தது. இரண்டாவதாக வந்த ஆம்புலன்ஸில் அங்கிருந்தவர்கள் என்னை ஏற்றி திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:—</u>

நாங்கள் பயணம் செய்த வண்டி மதன் பாலாஜிக்கு சொந்தமானது. விபத்து நடந்தபோது எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. அந்த விபத்தின்போது என் பர்ஸோடு அது தொலைந்துவிட்டது. நான் ஓட்டிபோன வண்டி சவர்லேட் க்ருஸ் மாடல் வண்டி என்றால் சரிதான். அந்த வண்டி அதிவேகமாக செல்லும் செகுசு வண்டி என்றால் சரிதான். அந்த வண்டியில் சன்ரூப் உள்ளது. அந்த வண்டி தானியங்கி மூலம் தானாக இயங்கக்கூடிய க்ருஸ் கண்ரோல் உள்ளது என்றால், எனக்குத் தெரியாது. நான் தான் வண்டியை ஓட்டினேன். சம்பவம் நடந்தபோது சாலையில் இரண்டு பேரிகார்டுகள் இருந்தன என்றால் சரிதான். அந்த இடத்தில் திண்டுக்கலில் இருந்து வரும் வாகனங்கள் மிதமான வேகத்தில் வரமுடியும் என்றால் சரிதான். அந்த இடத்தில் மக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றால் சரிதான். சுற்றி நிறைய வீடுகள் உள்ளன என்றால் சரிதான். நான் கார் ஓட்டி வந்தபோது இறந்துபோன மதன்பாலாஜி மேல்பகுதியில் உள்ள சன் ரூப்பை பயன்படுத்தி நின்று கொண்டே வந்தார் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் எங்கள் வண்டிக்கு முன்பாக இரண்டு

லாரிகள் சென்று கொண்டு இருந்தன என்றால் சரிதான். அந்த லாரியை முந்துவதற்கு நான் முயற்சி செய்த போதுதான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் அவ்வாறு Overtake செய்யவில்லை. விபத்தின்போது நானும், மதன் பாலாஜியும் மிதமாக மது அருந்தி இருந்தோம் என்றால் சரியல்ல. விபத்து நடந்தபிறகும் நான் நல்ல சுயநினைவோடுதான் இருந்தேன் என்றால் சரிதான். விபத்து நடந்தபிறகு மதன் பாலாஜியின் அப்பாவிற்கு நான் அலைபேசியில் தகவல் சொன்னதற்கு சிறப்பான காரணங்கள் உண்டா என்றால், அவருக்கு தான் தகவல் சொல்ல வேண்டும் என்பதால் சொன்னேன். நான் முழுமையான மதுபோதையில் இருந்ததால்தான், என்னிடம் புகார் வாங்க முடியாமல், அசா. 1யிடம் புகார்மனு வாங்கினார்கள் என்று சொன்னால் சரியல்ல. சன் ரூப்பை திறந்து அதன் வழியாக நின்று கொண்டு இருந்தபோது, நான் வேகமாகப்போய் திடீரென பிரேக் போட்டதால்தான், மதன்பாலாஜி வெளியே தூக்கி எறியப்பட்டு சாலையில் விழுந்து விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரி தன்னுடைய வண்டியை கவனத்தோடுதான் நிதானமாக ஓட்டி வந்தார் என்றாலும், நாங்கள் வந்த வேகத்தைப் பார்த்து அவர் தன்னுடைய வண்டியை நிறுத்தி விட்டார் என்றாலும், நாங்களாகத்தான் அதன்மீது மோதி விபத்தை ஏற்படுத்திக் கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :-</u>** இல்லை.

Taken down by me/before me in open court on 19.11.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA

Digitally signed by V DEEPA
Date: 2025.11.19 18:38:32 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**C.C. 199/2025**

**Prosecution Witness : 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. அசோக்குமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. பழனிச்சாமி** | **Calling** | : | **காய்கறி வியாபாரம்** |
| **Village** | : | **ஸ்ரீராமபுரம், ஒட்டன்சத்திரம்** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **44** |
| | | | **Dated** | : | **19.11.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**எதிரி ஆஜர்.**

அ.சா. 3 (பட்டியல் சாட்சி 3), **திரு. அசோக்குமார்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :–**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 16.12.2021ம் தேதி எங்களுடைய உறவினர் கணேஷ் என்பவர் எனக்கு அலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மதன்பாலாஜிக்கு விபத்து ஏற்பட்டுவிட்டது என்று சொன்னார். உடனே நான் மதன் பாலாஜியின் சித்தப்பா கணேசனுக்கு போன் செய்து உண்மையில் விபத்து நடந்ததா என்று விசாரித்தேன். அவர் சம்பவம் உண்மை தான் என்று சொன்னதால் நான் உடனே திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு போனேன். அங்கே மதன் பாலாஜியின் அப்பா சக்திவேலிடம் விசாரித்தேன். அவர் அன்று மாலை 06.00 மணியளவில்

மதன் பாலாஜியும், ஒரு டிரைவரும் திண்டுக்கலுக்கு வசூலுக்காக வந்ததாகவும், அப்போது எதிரே வந்த 407 வேன் அதிவேகமாக வந்து மோதியதில் மதன் பாலாஜி வண்டியில் கண்ணாடி உடைந்து தூக்கி எறியப்பட்டு இறந்துவிட்டார் என்று சொன்னார். அதன் அடிப்படையில் தாடிக்கொம்பு காவல் நிலையத்தில் புகார் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். நான் அவருடன் தாடிக்கொம்பு காவல் நிலையத்திற்கு சென்று புகார் மனுவை எழுதிக் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் எழுதியதுதான். அதில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

இந்த விபத்தைப் பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை :–</u>** இல்லை.

Taken down by me/before me in open court on 19.11.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2025.11.19 18:38:40 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**C.C. 199/2025**

**Prosecution Witness : 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திருமதி. பிரபா** | **Caste** | : | |
| **Husband's Name** | : | **திரு. சக்திவேல்** | **Calling** | : | **வீட்டுக்குடித்தனம்** |
| **Village** | : | **ஒட்டன்சத்திரம்** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **48** |
| | | | **Dated** | : | **19.11.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜர்.**

அ.சா. 4 (பட்டியல் சாட்சி 4), **திருமதி. பிரபா** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :–**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வீட்டுக்குடித்தனமாக இருக்கிறேன். கடந்த 16.12.2021ம் தேதி என் கணவர் எனக்கு சுமார் 07.30 மணியளவில் போன் செய்து என் மகன் மதன் பாலாஜிக்கு விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும், தயாராக இருக்குமாறும் சொன்னார். சம்பவ இடத்திற்கு நானும், என் கணவர் மற்றும் கொழுந்தனார் ஆகியோர் போனோம். அங்கு போனபிறகு என் மகனை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டதாக சொன்னார்கள். நாங்கள் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு போய் பார்த்தபோது, என் மகன் இறந்துவிட்டதாக சொன்னார்கள். அதன்பிறகு என் கணவரும், அவருடைய அக்கா மகன் அசோக்குமாரும் தாடிக்கொம்பு

காவல்நிலையத்திற்கு போய் புகார் கொடுத்தாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–**

இந்த சம்பவம் பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை :–** இல்லை.

Taken down by me/before me in open court on 19.11.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2025.11.19 18:38:50 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**C.C. 199/2025**

**Prosecution Witness : 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. கணேசன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. பழனிச்சாமி** | **Calling** | : | **சிவில் இன்ஜினியர்** |
| **Village** | : | **ஒட்டன்சத்திரம்** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **54** |
| | | | **Dated** | : | **19.11.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**எதிரி ஆஜர்.**

அ.சா. 5 (பட்டியல் சாட்சி 5), **திரு. கணேசன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :–**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து சிவில் இன்ஜினியராக வேலை செய்து வருகிறேன். நான் விபத்தில் இறந்துபோன மதன் பாலாஜியின் சித்தப்பா. 16.12.2021ம் தேதி மாலை சுமார் 07.30 – 07.35 இருக்கும், அப்போது என் அண்ணன் சத்திவேல் அலைபேசியில் என்னை அழைத்து தன் மகனுக்கு விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும், கிளம்பி வருமாறும் சொன்னார். என் அண்ணனும், அவரது மனைவி பிரபாவும், ஒட்டன்சத்திரம் பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டு இருந்தார்கள். நான் அவர்களை காரில் அழைத்துக் கொண்டு விபத்து நடந்த இடத்திற்கு போனேன். அங்கு விபத்துக்குள்ளான கார் மட்டும் இருந்தது வேறு யாரும் இல்லை. நாங்கள் மூன்று பேரும் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு

போனோம். அங்கு அவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக சொன்னார்கள். ராமேஸ்வரத்தில் இருந்து வந்த தங்கச்சிமடத்தை சேர்ந்த வண்டி இடித்து விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். இது சம்மந்தமாக என் அண்ணனும், அசோக்குமாரும் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க போனார்கள். நான் உறவினர்களுக்கு தகவல் சொல்லும் வேலை மற்றும் போஸ்ட்மாட்டம் செய்து கொடுத்த பிறகு இதர சடங்குகள் பற்றிய வேலை ஆகியவற்றில் இருந்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

இந்த சம்பவம் பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். போலீசார் விசாரித்து என்னிடம் எந்த வாக்குமூலமும் வாங்கவில்லை என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை :–</u>** இல்லை.

Taken down by me/before me in open court on 19.11.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2025.11.19 18:38:59 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.